மதுரை மாவட்டம்

M

# முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: [ | | | | | ]

நேரம்: 1.30 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள்: 45

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 10×1=10

1. வேலைப்பகிர்வு குழு வாரியாக அல்லது பிரிவு வாரியாக உள்ளது ......... எனவும் அழைக்கப்படுகிறது.

அ) ஒருங்கிணைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) பணிக்கமர்த்துதல் ஈ) ஒழுங்கமைத்தல்

2. குறியிலக்கு மேலாண்மை செயல்முறையின் முதல் நிலை எது?

அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது

ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது

இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது

ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

3. *பின்வரும் குறியீடுகளை பயன்படுத்தி பட்டியல் - I, பட்டியல் - II பொருத்தவும்:*

| *பட்டியல் - I* | | *பட்டியல் - II* |
|---|---|---|
| 1. அறிவியல் | - | i) பணியாளர்களின் மனப்பான்மையில் மாற்றம் |
| 2. இணக்கம் | - | ii) தனிமனிதத்துவம் அல்ல |
| 3. ஒத்துழைப்பு | - | iii) சச்சரவின்மை |
| 4. மனப்புரட்சி | - | iv) கட்டை விரலின் விதி அல்ல |

| | 1 | 2 | 3 | 4 | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | iv | iii | ii | i | ஆ) | ii | i | iii | iv |
| இ) | iii | iv | ii | i | ஈ) | i | ii | iv | iii |

4. மூலதன சந்தையின் பங்கேற்பாளர் ............ ஆவர்.

அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதிநிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

5. *பின்வரும் கூற்றுகளை கவனிக்கவும் :*

*கூற்று (A) :* நிதி சந்தை தனிநபர்களுக்கு, விவசாய துறைகளுக்கு, தொழில் துறைகளுக்கு, சேவை துறைகளுக்கு மற்றும் நிதி நிறுவனங்களான வங்கிகள், காப்பீட்டுத் துறைகள், சேமநலக் காப்பு நிதிகள் மற்றும் அரசுக்கு நிதி உதவிகளை வழங்குகிறது.

*காரணம் (R) :* இது ஒட்டு மொத்த பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது.

*பின்வரும் குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையை காண்க.*

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மற்றும் (R) என்பது (A) க்கு சரியான விளக்கமாகும்.

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A) க்கு சரியான விளக்கம் அல்ல.

இ) (A) சரி ஆனால் (R) தவறு. ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

6. நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர்

அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

7. PAN என்பதன் விரிவாக்கம் ............ ஆகும்.

அ) நிரந்தர தொகை எண் ஆ) முதன்மை கணக்கு எண்

இ) நிரந்தர கணக்கு எண் ஈ) நிரந்தர கணக்கு வாரிசு

8. கீழ்கண்டவற்றில் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு:

அ) பணச்சந்தை - நீண்டகாலநிதிகள்

ஆ) சந்தையின் பங்கேற்பாளர்கள் - காப்பீட்டு நிறுமங்கள்

இ) பங்குச் சந்தை கருவிகள் - வணிகத்தாள்கள்

ஈ) கருவூலச் இரசீதுகள் - 91 நாட்கள்

9. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?

அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

10. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்.

அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பலமுறை

## பகுதி - II

குறிப்பு : ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் 16-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 4×2=8

11. மேலாண்மை என்றால் என்ன?
12. குறியிலக்கு மேலாண்மைக்கு வரைவிலக்கணம் தருக.
13. பரஸ்பர நிதி என்றால் என்ன?
14. பணச்சந்தையில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை?
15. பங்குச்சந்தை வரைவிலக்கணம் தருக.
16. நீ மேலாளராக பணியாற்றும் போது நிறுவன குறிக்கோள்களை அடைய பணியாளர்களை எப்படி ஒருங்கிணைத்தல் செய்வாய்?

## பகுதி - III

குறிப்பு : ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் 22-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 4×3=12

17. மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?
18. குறியிலக்கு மேலாண்மையில் ஏதேனும் நான்கு செயல்முறைகளை பட்டியலிடுக.
19. இரண்டாம் நிலைச் சந்தை - சிறு குறிப்பு வரைக.
20. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
21. உள்வழி வர்த்தகம் என்றால் என்ன?
22. பங்கு சந்தையில் ஊக வணிகராக செயல்பட வாய்ப்பு கிடைத்தால் எந்த வகையான ஊக வணிகராக செயல்படுவாய்? காரணம் கூறுக.

## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×5=15

23. நவீன மேலாண்மைக் கோட்பாடுகள் ஏதேனும் ஐந்தை விவரி. **(அல்லது)**
    மூலதன சந்தையின் பல்வேறு பணிகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக.
24. குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? **(அல்லது)**
    பணச்சந்தைக்கும், மூலதனச் சந்தைக்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் ஐந்தினை விவரி.
25. ஏதேனும் ஐந்து பங்குச் சந்தை பணிகளை விவரி. **(அல்லது)**
    செபியின் அதிகாரங்களை விவரி.

--------